இருக்கின்றன, அவருடைய தொகுதிக்கு வரவில்லை என்பதைத்தான் சொல்கிறார்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நஷ்டத்திலே நூற்பாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் புதிய நூற்பாலைகளை அமைக்கின்ற எந்தத் திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் கூட்டுறவு நூற்பாலைகளில் நஷ்டத்தில் இயங்குகின்ற சிலவற்றை தனியாருக்கு விற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிக்கொண்டு இருக்கின்ற எந்த நூற்பாலையையும் தனியாருக்கு விற்கின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257, திருமதி என். கனகவல்லி, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. ம. தனபால், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

258—

மண்ணிவாக்கம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.

***38076—**திரு. ம. தனபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியில் உள்ள மண்ணிவாக்கம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆவலோடு எதிர்பார்த்தேன். இது சம்பந்தமாக மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து பிரேரணை அனுப்பப்பட்டு திருப்பப்படுகிறது. மண்ணிவாக்கம் என்று சொல்லப்படுகின்ற அந்த இடம் பல்வேறு கிராமங்கள் சுற்றி இருக்கின்ற இடம். ஆதனூர், வண்டலூர், ஓட்டேரி, முடிச்சூர், கரசங்கழனி போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் எல்லாம், இதை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதனால் பயன்பெறுவார்கள். கிட்டத்தட்ட 700 பிள்ளைகளுக்கு மேலாக அந்தப் பள்ளியிலே படிக்கின்றார்கள். 10 ஏக்கர் நிலப்பரப்பு இருக்கின்றது. உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு தனியார் ஒருவர், தன்னார்வம் மிக்கவர், 60 ஆயிரம் ரூபாயை, தன்னுடைய சொந்தப் பணத்தை கட்டியிருக்கின்றார். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும்பொழுது சில விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் செய்யவேண்டி இருக்கிறது. குறிப்பிட்ட இந்தப் பள்ளியைச் சுற்றிலும் 5 கிலோ மீட்டர் தூரத்தில் கிளாம்பாக்கம் என்ற இடத்திலே ஆதிதிராவிடர் நலத் துறையின் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. மற்றும் 5 கிலோ மீட்டர் தூரத்திலே படப்பை என்ற இடத்திலே அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 3 கிலோ மீட்டர் தூரத்திலே பீர்க்கங்கரணை என்ற இடத்திலே அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. சாதாரணமாக 8 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு உயர்நிலைப் பள்ளிகள் இல்லை என்றால்தான் அரசு இதை பரிசீலிக்கிறது. ஆகவே, விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த ஆண்டிலே வரப்பெற்று இருக்கிற கருத்துருவை உயர்நிலைக் குழு பரிசீலிக்கும். குழு பரிந்துரை செய்தால் அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 259, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.